மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் கடலாடி.
முன்னிலை: திரு. நா. வெங்கடேசன்,D.C.,B.A.,M.L.,PGDCLCF.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கடலாடி.
2023-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 11ம் நாள் புதன் கிழமை
I.A.No. 107/2021
in
O.S. No. 29/2021
CNR.No.TNRM100004472021

பூமயில் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

பேச்சியம்மாள் .... எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி

இந்த இடைநிலை மனு என் முன்பாக 07.01.2023ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர்கள் திரு.J.உதுமான், திரு.M.சக்திவேல், திரு.B.பூமுருகன், திரு.T.முனீஸ்வரன், திரு.RBS.முகிலரசன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. A.வின்ஸ்ராஜா, திரு.S.R.மினிலா, திரு.R.முருகவேல்ராஜன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும், எதிர்வாதங்களையும் கேட்டு மனுதாரர்/வாதி மற்றும் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்றுவரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

## உத்தரவு

1) மனுதாரர்/வாதி தரப்பில் தாவா சொத்தில் தாவா சொத்தை எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி யாருக்கும் விற்று எவ்வித வில்லங்கங்களும் ஏற்படுத்தக்கூடாது என்று இம்மனு முடியும் வரை இடைக்காலமாகவும் அசல் வழக்கு முடியும் வரை தற்காலிகமாகவும் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவு பிறப்பிக்க வேண்டி மனுதாரர்/வாதியால் சி.பி.சி. ஆர்டர் 39 ரூல் 1,2-ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்</u>:-

மனுதாரர் இவ்வழக்கில் தான் வாதி என்றும் இவ்வழக்கில் கண்ட தாவா சொத்தானது மனுதாரருக்கு பாத்தியப்பட்டதென்றும் தாவா சொத்தின் விஸ்தீரணம்

11.1.2023

48.75 செண்ட் நிலம் என்றும் 1ம் பிரதிவாதியும், முத்துவேல் என்பவரும் தனக்கு மக்கள் ஆவார்கள் என்றும் 1ம் பிரதிவாதி தூத்துக்குடியிலுள்ள பூபாலராயர்புரத்தில் உள்ள அந்தோணிராஜ் என்பவருக்கு மனுதாரரும் மனுதாரரின் கணவரும் மனுதாரரின் மகனான முத்துவேலும் 1985ம் ஆண்டு வாக்கில் திருமணம் செய்து கொடுத்ததாகவும், மனுதாரரின் மகன் முத்துவேல் உழைப்பைக்கொண்டு சம்பாதித்த பணத்தை வைத்து 1ம் பிரதிவாதிக்கு பல இலட்ச ரூபாய் செலவு செய்து திருமணம் செய்து வைத்ததாகவும், 1ம் பிரதிவாதிக்கு பிறந்த 2 ஆண்மக்கள் மற்றும் 1 பெண் மக்களுக்கு செய்ய வேண்டிய சீர்வரிசைகளை செய்து வைத்ததாகவும், 1ம் பிரதிவாதி கடந்த 1985ம் வருடம் முதல் தூத்துக்குடியில் பூபாலராயர்புரம் 1வது தெருவில் உள்ள கதவு எண்.1/15 பி2 என்ற முகவரியில் நிரந்தரமாக வசித்து வருகிறார் என்றும் மனுதாரரும் மனுதாரரின் கணவரும் சாயல்குடி டவுனிலுள்ள துரைச்சாமிபுரத்தில் அமைந்துள்ள மகன் முத்துவேல் வீட்டிலேயே தங்கி வசித்து வருவதாகவும் அவர் அனைத்து பணிவிடைகளையும் செய்து வருவதாகவும் மனுதாரரின் மகன் முத்துவேல் அவரது 3 ஆண் மக்களும் சென்னையில் தங்கி வேலை பார்ப்பதால் அவர் 2017ம் வருடம் ஜூன் மாதம் சென்னைக்கு சென்றுள்ளார் என்றும் அப்போது மனுதாரரையும் அவரது கணவரையும் பார்த்துக்கொள்ள 1ம் பிரதிவாதியிடம் சொல்லியுள்ளார் என்றும் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி நயவஞ்சகமாக தனது பெயரிலும் முத்துவேல் பெயரிலும் உயில் எழுதி வைக்கும்படி கூறியதாகவும் அதன்படி 10.10.2017ம் தேதி ஒரு உயில் ஆவணத்தினை எழுதி பதிவு செய்ய ஏற்பாடு செய்ததாகவும், எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி உயில் ஆவணம் எழுதி கொடுத்துள்ளது போல உயில் ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்று தன்னை எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி நம்பவைத்து எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி மோசடியாக தயார் செய்த இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தை தனக்கு படித்து காண்பிக்காமல் ஏற்கனவே தயார் செய்து வைக்கப்பட்டிருந்த ஆவணத்தில் தான் கையெழுத்து செய்யக்கூடிய அளவில் நல்ல நிலையில் இருந்தாலும் அவசர அவசரமாக எல்லா பக்கங்களிலும் தன்னுடைய கைரேகையை மோசடியாக எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி பெற்றுள்ளார் என்றும் உண்மையில் தான் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு எவ்வித இனாம்செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுக்க விரும்பியதில்லை என்றும் மேலும் அதற்காக தான்

11/1/2023

நேரடியாக சென்று சாயல்குடியில் உள்ள அய்யம்பெருமாள் என்பவரிடம் எந்த முத்திரைத்தாளும் வாங்கவில்லை என்றும் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியே தன்னை மோசடி செய்ய வேண்டும் என்பதற்காக ஆள்மாறாட்டம் செய்து முத்திரைத்தாள்களை தன் பெயரில் வாங்கியுள்ளார் என்பது தற்போது தான் தனக்கு தெரியவந்துள்ளது என்றும் அந்த ஆவணத்தை எதிர்மனுதாரர்/1-ம் பிரதிவாதி மோசடியாக உற்பத்தி செய்துள்ளார் என்றும் இந்நிலையில் தன்னுடைய கணவருக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதாலும், தனக்கும் உடல்நிலை சரியில்லாமல் போனதாலும், தான் எழுதி வைத்த அசல் உயில் ஆவணத்தை கடந்த 11.04.2021ம் தேதி எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தன்னிடம் தருமாறு தான் கேட்டேன் என்றும் ஆனால் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி அந்த ஆவணத்தை தனக்கு கொடுக்க முடியாது என்று கூறியதால் சந்தேகமடைந்த தான் தனது மகன் மூலமாக தாவா சொத்தை பொறுத்து கடந்த 12.04.2021ம் தேதி வில்லங்கம் பார்த்தேன் என்றும் அந்த வில்லங்கத்தினுடைய பதிவுகளை தனது மகன் தனக்கு படித்து காண்பித்து அந்த வில்லங்கத்தில் தாவா சொத்தை பொறுத்து தன்னிடம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி மோசடியாக கடந்த 10.10.2017ம் தேதி இனாம்செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வாங்கியிருப்பதையும், தனது விருப்பம் போல அதில் உயில் எழுதப்படவில்லை என்பதையும், தான் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியால் ஏமாற்றப்பட்டுள்ள விபரமும் கடந்த 12.04.2021ம் தேதி தனக்கு தெரிய வந்தது என்றும் தாவா சொத்திற்கு பட்டா, வரி முதலியவைகள் மனுதாரரின் பெயரிலேயே இருந்து வருவதாகவும், எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தாவா சொத்தை பொறுத்து மோசடியாக ஏற்படுத்தி கொண்ட இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தை பயன்படுத்தி ஏமாற்ற வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தாவா சொத்தை வில்லங்கம் முதலானவைகளை ஏற்படுத்திவிட கடந்த 12.04.2021ம் தேதியிலிருந்து முயற்சி செய்து வருகிறார் என்றும் தாவா சொத்தை எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி யாருக்கும் விற்று எவ்வித வில்லங்கங்களும் ஏற்படுத்தக்கூடாது என்று இம்மனு முடியும் வரை இடைக்காலமாகவும் அசல் வழக்கு முடியும் வரை தற்காலிகமாகவும் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவு செய்து நீதி செலுத்த வேண்டியது அவசியமும் நியாயமுமாக இருக்கிறது என்று இந்த மனுவினைத் தாக்கல் செய்துள்ளார்.

11/1/2023

3) எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் மனுவின் சுருக்கம்:

எதிர்மனுதாரர் தான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிருரையை இந்த இடைநிலை மனு எண்.107/2021ல் எதிருரையாக ஏற்பு செய்து கொள்ளுமாறு இந்நீதிமன்றத்தில் குறிப்பாணை தாக்கல் செய்துள்ளார். வாதியை 1ம் பிரதிவாதி ஏமாற்றி தாவா சொத்தை பொறுத்து இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வாங்கியிருந்தாலும், தாவா சொத்தினுடைய அனுபவம் இன்றுவரை வாதியின் கைவச அனுபவத்திலேயே இருந்து வருகிறது என்று கூறியிருப்பது உண்மையல்ல என்றும் அவ்வாறு ஏமாற்றி வாங்கவேண்டிய அவசியம் இந்த பிரதிவாதிக்கு ஒரு போதும் ஏற்படவும் இல்லை என்றும் வாதியை அவரது மகன் மனைவி துர்போதனையில் பராமரிக்காமல் விட்டுச்சென்றதாலும் இந்த பிரதிவாதிக்கு சீதனம் கொடுப்பதாக கூறியதையே வாதி செயல்படுத்தி உள்ள நிலையில் இந்த பிரதிவாதியின் ஆளுகையிலும் அனுபோகத்திலும் தபசில் சொத்து இருந்து வருகிறது என்பதே உண்மை என்றும் தாவா சொத்து எந்த காலத்திலும் 1ம் பிரதிவாதியின் கைவச அனுபவத்தில் ஒப்படைக்கவில்லை என்றும் தாவா சொத்தை எக்காலத்திலும் 1ம் பிரதிவாதி ஒப்புக்கொண்டு அடையவுமில்லை என்றும் அனுபவம் செய்யவுமில்லை என்றும் தாவா சொத்தினுடைய பட்டா வரி முதலானவைகள் இன்றுவரை வாதியின் பெயரிலேயே இருந்து வருகிறது என்று கூறியிருப்பது உண்மையில் இந்த பிரதிவாதியின் பெயரில் தான் பட்டா ஏற்பட்டுள்ளது என்றும் எனவே 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் அடிமுதலே (Void ab initio) செல்லாததாகும் என்றும் 1ம் பிரதிவாதி மோசடியாக ஆவணத்தை உற்பத்தி செய்ததால் தான் தாவா சொத்துக்கான பட்டா முதலானவைகளை 1ம் பிரதிவாதி தன் பெயரில் ஒரு வேலை மாற்றினால் விசாரணையின் போது 1ம் பிரதிவாதி மோசடியாக வாதியிடம் இருந்து உயிலுக்கு பதிலாக இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி மோசடியாக பதிவு செய்தது தெரிய வந்துவிடும் என்பதால் தாவா சொத்துக்கான பட்டாவை 1ம் பிரதிவாதி தன் பெயருக்கு மாற்றுவதற்கு எந்தவித முயற்சியும் செய்து கொள்ளவில்லை என தெரிய வருகிறது என்பது சரியல்ல என்றும் இந்த பிரதிவாதி பெயரில் முறையாக பட்டா பெறப்பட்டுள்ளது என்றும் பிரதிவாதி சார்பில் குத்தகைக்கு விடப்பட்டு வழக்கிடை தபசில் சொத்தினை அனுபோகம் செய்து வந்து வழக்கிடை தபசில்

11/1/2023

சொத்தில் உள்ள பனை மரங்களில் அவ்வப்போது விளையும் பொருட்களை ஓலை மற்றும் பனங்காய்களை வெட்டி எடுத்து அதன் மூலம் உற்பத்தியாகும் கருப்பட்டியை வாங்கி பயன்படுத்தி வருகிறார் என்றும் வாதியின் வாக்குமூலம் உண்மையானது அல்ல என்றும் வாதியின் வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் அதனையிட்டு வாதியின் வழக்கினை எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றும் வாதி சுத்தமான கரங்களுடன் இந்த நீதிமன்றத்தை 2 வாதியின் மகன் தூண்டுதலின் பேரிலேயே பொய்யான தகவல் கூறி சமூகம் நீதிமன்ற பொன்னான நேரத்தை வீணடிக்கவே இவ்வாறு தாக்கல் செய்துள்ள தாவா வழக்கினை இந்த பிரதிவாதியின் முறையீட்டு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிர்மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

4)இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

5) வினா? இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா?

மனுதாரர் இவ்வழக்கில் தான் வாதி என்றும் இவ்வழக்கில் கண்ட தாவா சொத்தானது மனுதாரருக்கு பாத்தியப்பட்டதென்றும் தாவா சொத்தின் விஸ்தீரணம் 48.75 செண்ட் நிலம் என்றும் 1ம் பிரதிவாதியும், முத்துவேல் என்பவரும் தனக்கு மக்கள் ஆவார்கள் என்றும் 1ம் பிரதிவாதி தூத்துக்குடியிலுள்ள பூபாலராயர்புரத்தில் உள்ள அந்தோணிராஜ் என்பவருக்கு மனுதாரரும் மனுதாரரின் கணவரும் மனுதாரரின் மகனான முத்துவேலும் 1985ம் ஆண்டு வாக்கில் திருமணம் செய்து கொடுத்ததாகவும், மனுதாரரின் மகன் முத்துவேல் உழைப்பைக்கொண்டு சம்பாதித்த பணத்தை வைத்து 1ம் பிரதிவாதிக்கு பல இலட்ச ரூபாய் செலவு செய்து திருமணம் செய்து வைத்ததாகவும், 1ம் பிரதிவாதிக்கு பிறந்த 2 ஆண்மக்கள் மற்றும் 1 பெண் மக்களுக்கு செய்ய வேண்டிய சீர்வரிசைகளை செய்து வைத்ததாகவும், 1ம் பிரதிவாதி கடந்த 1985ம் வருடம் முதல் தூத்துக்குடியில் பூபாலராயர்புரம் 1வது தெருவில் உள்ள கதவு எண்.1/15பி2 என்ற முகவரியில் நிரந்தரமாக வசித்து வருகிறார் என்றும் மனுதாரரும் மனுதாரரின் கணவரும் சாயல்குடி டவுனிலுள்ள துரைச்சாமிபுரத்தில் அமைந்துள்ள மகன் முத்துவேல் வீட்டிலேயே தங்கி

11.1.2023

வசித்து வருவதாகவும் அவர் அனைத்து பணிவிடைகளையும் செய்து வருவதாகவும் மனுதாரரின் மகன் முத்துவேல் அவரது 3 ஆண் மக்களும் சென்னையில் தங்கி வேலை பார்ப்பதால் அவர் 2017 ம் வருடம் ஜூன் மாதம் சென்னைக்கு சென்றுள்ளார் என்றும் அப்போது மனுதாரரையும் அவரது கணவரையும் பார்த்துக்கொள்ள 1ம் பிரதிவாதியிடம் சொல்லியுள்ளார் என்றும் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி நயவஞ்சகமாக தனது பெயரிலும் முத்துவேல் பெயரிலும் உயில் எழுதி வைக்கும்படி கூறியதாகவும் அதன்படி 10.10.2017 ம் தேதி ஒரு உயில் ஆவணத்தினை எழுதி பதிவு செய்ய ஏற்பாடு செய்ததாகவும், எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி உயில் ஆவணம் எழுதி கொடுத்துள்ளது போல உயில் ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்று தன்னை எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி நம்பவைத்து எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி மோசடியாக தயார் செய்த இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தை தனக்கு படித்து காண்பிக்காமல் ஏற்கனவே தயார் செய்து வைக்கப்பட்டிருந்த ஆவணத்தில் தான் கையெழுத்து செய்யக்கூடிய அளவில் நல்ல நிலையில் இருந்தாலும் அவசர அவசரமாக எல்லா பக்கங்களிலும் தன்னுடைய கைரேகையை மோசடியாக எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி பெற்றுள்ளார் என்றும் உண்மையில் தான் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு எவ்வித இனாம்செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுக்க விரும்பியதில்லை என்றும் மேலும் அதற்காக தான் நேரடியாக சென்று சாயல்குடியில் உள்ள அய்யம்பெருமாள் என்பவரிடம் எந்த முத்திரைத்தாளும் வாங்கவில்லை என்றும் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியே தன்னை மோசடி செய்ய வேண்டும் என்பதற்காக ஆள்மாறாட்டம் செய்து முத்திரைத்தாள்களை தன் பெயரில் வாங்கியுள்ளார் என்பது தற்போது தான் தனக்கு தெரியவந்துள்ளது என்றும் அந்த ஆவணத்தை எதிர்மனுதாரர்/1-ம் பிரதிவாதி மோசடியாக உற்பத்தி செய்துள்ளார் என்றும் இந்நிலையில் தன்னுடைய கணவருக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதாலும், தனக்கும் உடல்நிலை சரியில்லாமல் போனதாலும், தான் எழுதி வைத்த அசல் உயில் ஆவணத்தை கடந்த 11.04.2021 ம் தேதி எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தன்னிடம் தருமாறு தான் கேட்டேன் என்றும் ஆனால் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி அந்த ஆவணத்தை தனக்கு கொடுக்க முடியாது என்று கூறியதால் சந்தேகமடைந்த தான் தனது மகன் மூலமாக தாவா சொத்தை பொறுத்து கடந்த 12.04.2021 ம் தேதி வில்லங்கம் பார்த்தேன் என்றும் அந்த வில்லங்கத்தினுடைய

11/1/2023

பதிவுகளை தனது மகன் தனக்கு படித்து காண்பித்து அந்த வில்லங்கத்தில் தாவா சொத்தை பொறுத்து தன்னிடம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி மோசடியாக கடந்த 10.10.2017ம் தேதி இனாம்செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வாங்கியிருப்பதையும், தனது விருப்பம் போல அதில் உயில் எழுதப்படவில்லை என்பதையும், தான் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியால் ஏமாற்றப்பட்டுள்ள விபரமும் கடந்த 12.04.2021ம் தேதி தனக்கு தெரிய வந்தது என்றும் தாவா சொத்திற்கு பட்டா, வரி முதலியவைகள் மனுதாரரின் பெயரிலேயே இருந்து வருவதாகவும், எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தாவா சொத்தை பொறுத்து மோசடியாக ஏற்படுத்தி கொண்ட இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தை பயன்படுத்தி ஏமாற்ற வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தாவா சொத்தை வில்லங்கம் முதலானவைகளை ஏற்படுத்திவிட கடந்த 12.04.2021ம் தேதியிலிருந்து முயற்சி செய்து வருகிறார் என்றும் தாவா சொத்தை எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி யாருக்கும் விற்று எவ்வித வில்லங்கங்களும் ஏற்படுத்தக்கூடாது என்று இம்மனு முடியும் வரை இடைக்காலமாகவும் அசல் வழக்கு முடியும் வரை தற்காலிகமாகவும் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவு செய்து நீதி செலுத்த வேண்டியது அவசியமும் நியாயமுமாக இருக்கிறது என்று இந்த மனுவினைத் தாக்கல் செய்து மனுதாரர் தனது வாதத்தினை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் தான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிருரையை இந்த இடைநிலை மனு எண்.107/2021ல் எதிருரையாக ஏற்பு செய்து கொள்ளுமாறு இந்நீதிமன்றத்தில் குறிப்பாணை தாக்கல் செய்துள்ளார். வாதியை 1ம் பிரதிவாதி ஏமாற்றி தாவா சொத்தை பொறுத்து இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வாங்கியிருந்தாலும், தாவா சொத்தினுடைய அனுபவம் இன்றுவரை வாதியின் கைவச அனுபவத்திலேயே இருந்து வருகிறது என்று கூறியிருப்பது உண்மையல்ல என்றும் அவ்வாறு ஏமாற்றி வாங்கவேண்டிய அவசியம் இந்த பிரதிவாதிக்கு ஒரு போதும் ஏற்படவும் இல்லை என்றும் வாதியை அவரது மகன் மனைவி துர்போதனையில் பராமரிக்காமல் விட்டுச்சென்றதாலும் இந்த பிரதிவாதிக்கு சீதனம் கொடுப்பதாக கூறியதையே வாதி செயல்படுத்தி உள்ள நிலையில் இந்த பிரதிவாதியின் ஆளுகையிலும் அனுபோகத்திலும் தபசில் சொத்து இருந்து வருகிறது என்பதே உண்மை என்றும் தாவா சொத்து எந்த காலத்திலும் 1ம் பிரதிவாதியின் கைவச

11/1/2023

அனுபவத்தில் ஒப்படைக்கவில்லை என்றும் தாவா சொத்தை எக்காலத்திலும் 1ம் பிரதிவாதி ஒப்புக்கொண்டு அடையவுமில்லை என்றும் அனுபவம் செய்யவுமில்லை என்றும் தாவா சொத்தினுடைய பட்டா வரி முதலானவைகள் இன்றுவரை வாதியின் பெயரிலேயே இருந்து வருகிறது என்று கூறியிருப்பது உண்மையில் இந்த பிரதிவாதியின் பெயரில் தான் பட்டா ஏற்பட்டுள்ளது என்றும் எனவே 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் அடிமுதலே (Void ab initio) செல்லாததாகும் என்றும் 1ம் பிரதிவாதி மோசடியாக ஆவணத்தை உற்பத்தி செய்ததால் தான் தாவா சொத்துக்கான பட்டா முதலானவைகளை 1ம் பிரதிவாதி தன் பெயரில் ஒரு வேலை மாற்றினால் விசாரணையின் போது 1ம் பிரதிவாதி மோசடியாக வாதியிடம் இருந்து உயிலுக்கு பதிலாக இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி மோசடியாக பதிவு செய்தது தெரிய வந்துவிடும் என்பதால் தாவா சொத்துக்கான பட்டாவை 1ம் பிரதிவாதி தன் பெயருக்கு மாற்றுவதற்கு எந்தவித முயற்சியும் செய்து கொள்ளவில்லை என தெரிய வருகிறது என்பது சரியல்ல என்றும் இந்த பிரதிவாதி பெயரில் முறையாக பட்டா பெறப்பட்டுள்ளது என்றும் பிரதிவாதி சார்பில் குத்தகைக்கு விடப்பட்டு வழக்கிடை தபசில் சொத்தினை அனுபோகம் செய்து வந்து வழக்கிடை தபசில் சொத்தில் உள்ள பனை மரங்களில் அவ்வப்போது விளையும் பொருட்களை ஓலை மற்றும் பனங்காய்களை வெட்டி எடுத்து அதன் மூலம் உற்பத்தியாகும் கருப்பட்டியை வாங்கி பயன்படுத்தி வருகிறார் என்றும் வாதியின் வாக்குமூலம் உண்மையானது அல்ல என்றும் வாதியின் வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் அதனையிட்டு வாதியின் வழக்கினை எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றும் வாதி சுத்தமான கரங்களுடன் இந்த நீதிமன்றத்தை வாதியின் மகன் தூண்டுதலின் பேரிலேயே பொய்யான தகவல் கூறி சமூகம் நீதிமன்ற பொன்னான நேரத்தை வீணடிக்கவே இவ்வாறு தாக்கல் செய்துள்ள தாவா வழக்கினை இந்த பிரதிவாதியின் முறையீட்டு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிர்மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதன்படி பார்க்கையில் தாவா சொத்தினை வாதிக்கு ஆதியில் சொந்தமாக இருந்ததாகவும் அதனை எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு கடந்த 10.10.2017 ம் தேதியன்று வாதியால் இனாம் செட்டில்மெண்ட் எழுதி வைக்கப்பட்டதாக எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியால்

11/1/2023

கூறப்பட்டிருப்பதும் அதனை மோசடியாக தன்னிடமிருந்து எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி எழுதி வாங்கியுள்ளார் என்று வாதி கூறியுள்ளதை பார்க்கையில் இப்பிரச்சினைக்கான தீர்வு வழக்கின் இறுதி விசாரணையில் தான் தெரியவரும். வாதியும், எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியும் தாய் மற்றும் மகள் ஆவார்கள். நெருங்கிய இரத்த தொடர்புடையவர்கள். தாவா சொத்து குறித்து வழக்கு உள்ள நிலையில் தாவா சொத்தில் யாதொரு வில்லங்கமும் ஏற்பட்டாலும் அதனை குறித்து

**Section 52 In The Transfer of Property Act, 1882**

52. Transfer of property pending suit relating thereto.–During the 1[pendency] in any Court having authority 2[3[within the limits of India excluding the State of Jammu and Kashmir] or established beyond such limits] by 4[the Central Government] 5[* * *] of 6[any] suit or proceedings which is not collusive and in which any right to immoveable property is directly and specifically in question, the property cannot be transferred or otherwise dealt with by any party to the suit or proceeding so as to affect the rights of any other party thereto under any decree or order which may be made therein, except under the authority of the Court and on such terms as it may impose. 7[Explanation.–For the purposes of this section, the pendency of a suit or proceeding shall be deemed to commence from the date of the presentation of the plaint or the institution of the proceeding in a Court of competent jurisdiction, and to continue until the suit or proceeding has been disposed of by a final decree or order and complete satisfaction or discharge of such decree or order has been obtained, or has become unobtainable by reason of the expiration of any period of limitation prescribed for the execution thereof by any law for the time being in force.] பிரிவு 52 சொத்துரிமை மாற்றுச்சட்டம் தெளிவாக கூறுகிறது.

அதனடிப்படையில் தாவா சொத்தின் உரிமை மூலம் குறித்து இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் தாவா சொத்தில் மேலும் வில்லங்கங்கள் ஏற்படக்கூடாது என்பதற்காக மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதை பார்க்கையில் இம்மனுவினை அனுமதிக்காவிட்டால் மேலும் இவ்வழக்கில் தொடர் எழுவினாக்கள் எழுவதற்கும் வழக்கு சொத்தை குறித்து பலர் பாதிப்படைவதற்கும் வாய்ப்புகள் உண்டாகி விடும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே தாவா சொத்து குறித்து மனுதாரரால் கோரியிருக்கும் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் மனுதாரருக்கு

11/1/2023

கிடைக்கக்கூடியது தான் என்றும் முதலேற்பு மனுதாரருக்கு சாதகமாக உள்ளதாகவும், மேலும் வேறு நபர்கள் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்பதனாலும் மேலும் இடர் மனுதாரருக்கு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதாலும் இடைநிலை பாத்திய வழக்கு மனுதாரருக்கு சாதகமாகவே உள்ளதாகவும் இந்நீதிமன்றம் கருதுகிறது. இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு எவ்விதமான இழப்பும் ஏற்படப்போவதில்லை என்றும் வழக்கு விசாரணையின் மூலம் தான் இறுதி முடிவு எடுக்கப்படும் என்பதால் இந்த இடைநிலை மனுவிற்கான முகாந்திரம் மனுதாரருக்கு சாதகமாக உள்ளதால் இம்மனுவிற்கான வினா மனுதாரருக்கு ஆதரவாகவும், எதிர்மனுதாரருக்கு எதிராகவும் இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

இறுதியாக இம்மனு அனுமதிக்கப்படுகிறது. மனுதாரரும் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியும் தாய், மகள் உறவுமுறையில் இருப்பதால் அவரவர் செலவு தொகைகளை அவரவர்களே ஏற்க வேண்டும் என்று இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 11.01.2023 இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

11/1/2023

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை
<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை

11/1/2023

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.